

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.9.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ், எம்.கே.கான், எஸ்.கே.நவாஸ், முகமது பஷீர், சையத் ரெய்ஹான், திருமதி பாத்திமா முசாபர், சிறுபான்மை நல இயக்குநர் திருமதி மு.ஆசியா மரியம் மற்றும் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் (மு.கூ.பொ) தாரேஸ் அகமது ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.9.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாநில தலைவர் ஆர்.அப்துல் கரீம், மாநில பொதுச் செயலாளர் ஏ.முஜிபுர் ரஹ்மான், மாநில பொருளாளர் ஏ.இப்ராஹீம், மாநிலச் செயலாளர் ஐ.அன்சாரி, மேலாண்மைக் குழு தலைவர் ஷம்சுல்லுஹா ரஹ்மானி, தணிக்கை குழு தலைவர் எம்.எஸ். சுலைமான் ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசின் வக்ஃப் வாரிய சட்ட திருத்த மசோதா தொடர்பாக சந்தித்துப் பேசினார்கள். இந்த சந்திப்பின் போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் துறைமுகம் காஜா ஆகியோர் உடனிருந்தனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்டம் - மயிலத்தில் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

# பெரியார் - அண்ணா - கலைஞரின் ஒட்டுமொத்த உருவம் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!

*மயிலம், செப். 21 -* விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்ட மன்றத் தொகுதி மயிலம் தெற்கு ஒன்றிய திமுக செயல்வீரர்கள் கூட்டம் கூட்டேரிப்பட்டில் நடை பெற்றது.

ஒன்றிய அவைத் தலைவர் சுப்பிரமணி தலைமை தாங்கினார். ஒன்றிய துணைச் செயலாளர்கள்



செல்வகுமார், பாலசுந்தரம், இந்திரா சுரேஷ், ஒன்றியப் பொருளாளர் ஆறுமுகம், மாவட்டப் பிரதிநிதிகள் கோபாலகிருஷ்ணன், சசி குமார் ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

மயிலம் தெற்கு ஒன்றியச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரு மான சேதுநாதன் ஏற்பட் டில் நடைபெற்ற இக்கூட் டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர், சிறுபான் மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றி கழக நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார் .

இக்கூட்டத்தில் அமைச் சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்,

ஆட்சிப் பொறுப்பேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் மூன்று ஆண்டுகளில் எண் ணற்ற பல திட்டங்களை செய்துள்ளார்.

இன்றைக்கு தந்தை பெரி யார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் இல்லை. இவர்களின் ஒட்டு மொத்த உருவமாக முதல்வர் தளபதியும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும்தான் உள்ளனர்.

இவர்களின் கரத்தை வலுப்படுத்த எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் அதிக வாக்குகள் பெற்று எதிர்த்து நிற்பவர்கள் டெபாசிட் இழக்க செய்ய வேண்டும் அதற்காக முதல மைச்சரின் ஆட்சியின் திட் டங்களையும், சாதனைக ளையும், மக்களிடத்தில் கொண்டு செல்ல வேண்டும் என தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் திராவிட முன்னேற்ற கழகம் இன் னும் 100 ஆண்டு காலம் ஆட்சியில் இருக்கும் என உறுதிபட தெரிவித்தார் .

கூட்டத்தில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற் கிழி வழங்கி கௌரவிப்பது, கழகத்தில் மகளிர்களையும், இளைஞர்களையும் உறுப்பி னராக சேர்த்தல், முதல மைச்சர் செய்த சாதனை களை துண்டுப் பிரசுரங்கள் மூலம் இல்லம்தோறும் கொண்டு செல்வது உள் ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

இச்செயல்வீரர்கள் கூட் டத்தில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணைச் செயலாளர்கள் அருணகிரி, அமுதா ரவிக் குமார், மயிலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மணி மாறன், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், பொதுக் குழு உறுப்பினர் வீடூர் ரவி, மாவட்டக் கவுன்சிலர்கள் விஜயன், மகேஸ்வரி குமரே சன், மாவட்ட சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் அன்சாரி, மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் செந்தில் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மகளிர் அணி சார்பில்

# கடலூர் மண்டலம் சார்பாக "கலைஞர் 100 - வினாடி வினா!"

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கி ணங்க, கழகத் துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி அறிவுறுத்தல்படி, நாளை (22.9.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணி அளவில், வடலூர், பண்ருட்டி சாலையில் உள்ள மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் "கலைஞர் 100 வினாடி வினா" கடலூர் மண்டலம் சார்பாக (கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, புதுச்சேரி) நடைபெறவுள்ளது.

கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகளும் மற்றும் மேற்கண்ட மாவட்டங்களைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதுசமயம் இந்நிகழ்ச்சியில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக சார்பணிகளின் நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, கிளை கழக மகளிர் துணை செயலாளர்கள், மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி மேயர், மண்டல குழு, ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றிய குழு, மாநகராட்சி நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
*செயலாளர்*
*கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.*



பொன்னேரியில் மறைந்த முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் உடலுக்கு தலைமைக் கழகம் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கழகக் கொடி போர்த்தி அஞ்சலி செலுத்தினார். மாவட்டச் செயலாளர்கள் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., மற்றும் ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ., துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ. மற்றும் அண்ணா அறிவாலயம் மேலாளர் ஆர்.பத்மநாபன் உள்ளிட்டோர் உடனுள்ளார்கள்.

### இதுவரை ரூ.6 கோடியே 7 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகை யினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப் பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண் காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகை யில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற் பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயி லிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 7 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 19–09–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறு வோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற் காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | வீ. துரைச்சாமி, சுப்புராஜ் நகர், 8வது வார்டு, போடிநாயக்கனூர், தேனி | 25,000/– |
| 2. | எஸ்.ரஹீம், நடுத் தெரு, பெரியகலையம்புத்தூர், நிகரப்பட்டி, திண்டுக்கல் | 25,000/– |
| 3. | எம். அப்துல் ஒஜீர், மேற்கு தெரு, மண்டபம், இராமநாதபுரம் மாவட்டம். | 25,000/– |
| 4. | மா. தர்மராஜ், சின்ன செட்டிக்குறிச்சி, அருப்புக்கோட்டை, விருதுநகர் | 25,000/– |
| 5. | எம்.கண்மணி சுப்பையா, சமத்துவபுரம், வள்ளியூர், இராதாபுரம், திருநெல்வேலி | 25,000/– |
| 6. | எஸ்.சந்தனமாரி, ரத்தினாபுரி, காயல்பட்டணம், திருச்செந்தூர், தூத்துக்குடி | 25,000/– |
| 7. | ப.செல்வராஜ், அந்தோணியார் குருசடி சமீபம், மணக்குடி, கன்னியாகுமரி | 25,000/– |
| 8. | ஏ.கே.கெங்காதரம், நடுத் தெரு, சிந்தலப்பட்டடை, நகரி, ஆந்திர மாநிலம் | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேடப்பட்டி இரா. முத்தையா

### செப்டம்பர் 21 (2022)



**திராவிடக் கொள்கையில் தீவிர பற்றுக் கொண்ட இவர், தனது மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து தீவிர கழகப் பணியாற்றினார்.**

**மதுரையில் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நான்குமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். அத்துடன் – தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவராகவும், ஒன்றிய அமைச்சராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**